**எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியம் - 2020**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயங்களை வலியுறுத்தல்**

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 04 மற்றும் 05 மூலம் குறிப்பிடப்படும் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பில் கவனத்தை செலுத்தக் கோருவதுடன், அதன் மூலம் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பில் பொருண்மையான நிச்சயமின்மையொன்று நிலவுவதாகவும், அதன் காரணமாக நிதியத்தின் வருமானங்களைத் தீர்வையாக்குதல் மற்றும் பொறுப்புகளிலிருந்து விடுதலை பெறல் ஆகியவற்றை பொதுவான வியாபார நடவடிக்கைகளினூடாக மேற்கொள்ள முடியாதுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே, இந்த நிதியத்தை துரிதமாக கலைப்பதற்கு எதிர்காலத்தில் அமைச்சரவைத் தீர்மானமொன்றினை சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் மூலம் நிதியத்தினை நிறுவுதல், அவற்றின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பொறுப்புகளை தீர்த்தல் தொடர்பில் பொது திறைசேரியினூடாக பொறுப்பேற்றல், கலைத்தல் போன்றன தொடர்பில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், நிதியத்தின் செயலாளரான பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை

உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இந்த நிதியத்திற்கு தொடர்ந்தியங்கும் தன்மையொன்று இல்லையென முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட காரணத்தால், நிதியத்தினால் இலங்கை மின்சார சபையின் மூலதன பங்களிப்பிற்காக முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 48,000,000,000 பெறுமதி நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நடைமுறையில் அதனை அறிக்கையிடும் காலப்பகுதியின் பின்னர் பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் எவ்வாறு தீர்வையாக்குவது என்பது தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | இந்த நிதியத்தினை இரத்துச்செய்வதற்கு எதிர்காலத்தில் துரிதமாக அமைச்சரவைக்கு முன்மொழிவொன்றை சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினுள் நிதியத்தினை தாபித்தல், அதன் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பொறுப்புகளை தீர்த்தல் தொடர்பில் பொது திறைசேரியினால் பொறுப்பேற்கப்படல், கலைத்தல் போன்றன தொடர்பில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தற்போது கணக்கு அறிக்கைகளில் அனைத்து பொறுப்புகளும் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. | உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ள திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தினால் திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டு, இந்த நிதியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 47,472,450,000 பெறுமதியில், தொடர்ந்தும் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள ரூபா 26,673,196,758 ஆன தொகையை செலுத்துவதற்கு 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்ட காசு மீதி ரூபா 378,108,419 மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம், நிதிக் | 2021 சனவரி 09ஆந் திகதியின் பின்னர் மிகை அறவீடு பெறுவனவுகள் காணப்படவில்லை. அதுவரையான வங்கி மீதி நாளதுவரையாக்கப்பட்டுள்ளதுடடன், அந்த மீதி ரூபா 1,107,728,128.74 ஆகும். | உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடப்பாடுகளிலிருந்து விலகுவதற்கு நிதியத்திடம் போதுமான அளவிலான காசு காணப்படாத காரணத்தால் நிதியத்தின் இயலாமை தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்றதன்மை உருவாகியிருந்தது. | | |
| (இ) | 2020 ஏப்ரல் 02ஆந் திகதிய 20/0684/204/060 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும், அதற்குரிய பிரிவுகள் மற்றும் 2020 மார்ச் 31ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் 03ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் நிதியத்தின் செயலாளரான பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். முகாமைத்துவக் குழுவின் தலைவர் மற்றும் மற்றும் ஒரு அங்கத்தவரால் சான்றுபடுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மேற்குறிப்பிடப்பட்ட செயலாளரின் கையொப்பத்துடன் மாத்திரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | இணங்குகின்றேன். | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | நிதி நிலைமைக்கூற்றின் இறுதியில் கடப்பாட்டுக்கூற்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கணக்கீட்டுக் கொள்கைகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசியலமைப்புச் சட்டத்தின் 149ஆம் உறுப்புரையின் பிரகாரம், அனைத்து அறவீட்டு வரிகள், தீர்வை வரிகள், வீதவரிகள் மற்றும் மற்றும் கட்டணங்கள் ஆகிய வழிகளில் கிடைக்கும் வருமானங்களும், குறித்த பணிக்காக ஒதுக்கீடு செய்யப்படாத குடியரசிற்கு சொந்தமான ஏனைய அனைத்து | எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியம், திரண்ட நிதியத்திற்கு புறம்பாக அமைந்துள்ள நிதியமொன்றாகும். இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு வகையான எரிபொருள் வகைகள் மற்றும் லீட்டர்களின் அளவின் அடிப்படையில் | நிதியத்தினை பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் ஊடாக முறையாக தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| வருமானங்கள் மற்றும் பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டும். எவ்வாறான போதிலும், 2020 மார்ச் 14ஆந் திகதி முதல் எரிபொருளின் விலையின் அடிப்படையில் அறவிடப்பட்டுள்ள மிகை அறவீட்டின் அடிப்படையிலான வருமானம் அவ்வாறு செலவு வைக்கப்படாது, எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அவ்வப்போது திருத்தத்திற்குள்ளாக்கப்பட்ட உப அளவுகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பின் மூலம் தன்னியக்க முறையில் கணிப்பிடப்பட்ட எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்தின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படும். |

**1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அரசியலமைப்புச் சட்டத்தின் 149ஆம் உறுப்புரை மற்றும் 01/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 29ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை | ஒதுக்கீட்டு சட்டத்தின் பிரகாரம் வருமானங்களை சேகரித்தல் மற்றும் செலவினம் மேற்கொள்ளல்.<br><br>2020 மார்ச் மாதம் 18ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியத்திற்காக ஒரு வருடத்தினுள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாராளுமன்ற அங்கீகாரம் கணக்காய்வுத் திகதியான 2021 செப்தம்பர் 06ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எவ்வாறான போதிலும், இரத்துச்செய்வதற்காக எதிர்காலத்தில் துரிதமாக அமைச்சரவைக்கு விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர், அ.நி. சுற்றறிக்கை 01/2020 இன் பிரகாரம் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக நிதியத்தினை தாபித்தல், அதன் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பொறுப்புகளை தீர்த்தல் தொடர்பில் பொது திறைசேரயினூடாக பொறுப்பேற்கப்படல், கலைத்தல் போன்றன உள்ளடங்களான நிதியத்தினை அனைத்து பணிகள் தொடர்பிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. | குறித்த உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டியமை. |

## 1.8 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை |
|---|---|
| விலை நிலைப்படுத்தல் நிதியமொன்றினை நிறுவுவதற்கான நோக்கமானது விலை அதிகரிக்கும் போது மற்றும் குறைவடையும் போது ஏற்படும் விலைத் தளம்பல்களைக் கட்டுப்படுத்தி நிலையான விலையொன்றினை பேணுதல் ஆன போதிலும், இந்த மிகையானது தேசிய விலை உறுதிப்பாட்டினை பேணுவதற்கான திரவத்தன்மையான சொத்தொன்றாக பேணிச்செல்லல் தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அல்லது அங்கீகாரமொன்று குறிப்பிடப்படாததுடன், அதில் காணப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் நிதியத்தின் ரூபா 48 மில்லியனான தொகை மின்சார சபைக்கு மூலதனப் பங்களிப்பொன்றாக வழங்கப்பட்டு, அதனை நிதி நிலமைக்கூற்றில் குறுங்கால மூதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்துள்ள போது இலங்கை சுங்கத்தினால் மிகை அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு நிலவிய விலைக்கே எரிபொருள் விற்பனை செய்யப்பட்ட காரணத்தால் 2020 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் எரிபொருள் விலை நிலைப்படுத்தல் நிதியம் ரூபா 21,705,914,462 ஆன தேறிய மிகைஅறவீட்டு வருமானத்தை ஈட்டியிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதியத்தின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 21,705,911,662 ஆன மிகையாக காணப்பட்டது.

## 3. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 3.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஏப்ரல் 02ஆந் திகதிய 20/0684/204/060ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும், அதற்குரிய பிரிவுகள் மற்றும் 2020 மார்ச் 31ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் 02ஆம் பந்தியின் பிரகாரம், மேற்படி நிதியத்தினை முகாமை செய்வதற்காக குழுவொன்றை நியமித்தல் அல்லது கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். | நிதிக்கூற்றுக்கள் உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4. நிதியத்தினை தாபித்தல் மற்றும் வருமானம் சேகரித்தல்

### 4.1 நிதியத்தின் தொழிற்பாட்டு பணிகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி உண்டியல்களை வெளியிடுவதன் மூலம் திரண்ட நிதியத்திற்கு நிதியை பெற்றுக்கொண்டு அதன் ஊடாக எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்திற்கு ரூபா 47,472,450,000 ஆன தொகை திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக 2020ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்திடமிருந்து உரிய நிதியேற்பாட்டினை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்திற்கு தேவையான ஆரம்ப மூலதனத் தொகை முற்பணமொன்றாக ரூபா 47.472 பில்லியன் தொகை திறைசேரி உண்டியல்களை வெளியிடுவதன் மூலம் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் பொறிமுறையின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே, திறைசேரி உண்டியல்களை வெளியிடுதல் மற்றும் விடுவிக்கப்படுத்தல் ஆகியன பிரதான பேரேட்டினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. | உரிய முறையில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | (i) 2020 மார்ச் 11ஆந் திகதி வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் திறைசேரியின் செயலாளரினூடாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்ட குறிப்பிற்கமைய, 2020 மார்ச் 09ஆந் திகதியளவில் சர்வதேச சந்தையில் மசகெண்ணெய் விலை 42.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், அது அப்போது பீப்பாயொன்று ஐ.அ.டொலர் 34.63 ஆக காணப்பட்டதாகவும், 2019 செப்தம்பர் மாதமளவில் அது ஐ.அ.டொலர் 59.73 ஆன காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>இது தொடர்பில் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட கணிப்பீடுகளுக்கமைய மசகெண்ணெய் விலை வீழ்ச்சியடைந்தமையால் எரிபொருள் லீட்டரொன்றின் விலை பின்வருமாறு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். | |

| | பெற்றோல் 92 ஒக்டேன் | பெற்றோல் 95 ஒக்டேன் | ஒட்டோ டீசல் | சுப்பிரி டீசல் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| விலைச் சீராக்கம் (லீட்டருக்கு) (அண்ணளவாக) | 12 | 15 | 14 | 20 |

| | | |
|---|---|---|
| (ii) | இந்த விலை வீழ்ச்சியின் நலன், வழங்கப்பட்டுள்ள வரிச் சலுகைகள் ஆகியவற்றை அறவீடு செய்த பின்னர் மொத்த நிதியேற்பாட்டினையும் பொதுமக்களுக்கு வழங்குதல், வரி அறவீட்டினை அதிகரித்து மொத்த நலனையும் அரச வருமானத்திற்கு பெற்றுக்கொள்ளல், எரிபொருளின் சில்லறை விலையினை குறைத்தல் மற்றும் எரிபொருள் விலையில் மாற்றங்களை மேற்கொள்ளாது எரிபொருள் விநியோக நிறுவனங்களால் இறுதி 05 மாதங்களினுள் வழங்கப்பட்டுள்ள நட்டத்தினை ஈடுசெய்வதற்கான 04 மாற்றுவழிகளின் கீழ் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். |
| (iii) | எவ்வாறான போதிலும், வர்த்தக மற்றும் முதலீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் குறிப்பின் (ஆ) பந்திக்கமைய ஒட்டோ டீசலுக்காக ரூபா 11, பெற்றோல் 95 ஒக்டேனுக்காக ரூபா 15, சுப்பிரி டீசலிற்காக ரூபா 20 எனுமாறு விலை குறைப்பின் சேமிப்பிற்காக சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மிறை அறவீட்டினை மேற்கொள்வதற்கு அல்லது சந்தை விலையினை குறைப்பதற்காக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். |
| (iv) | அதன் பிரகாரம், 2020 மார்ச் 13ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 2166/35ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் பின்வருமாறு எரிபொருள் தொடர்பில் தீர்வை வரியுடன் அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடு 2020 மார்ச் 14ஆந் திகதி முதல் 02 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் வகையில் விதிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். |

| | **பெற்றோல் 92 ஒக்டேன்** | **பெற்றோல் 95 ஒக்டேன்** | **ஒட்டோ டீசல்** | **சுப்பிரி டீசல்** |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மிகை அறவீடு (லீட்டருக்கு) | 0 | 15 | 11 | 20 |

| | | |
|---|---|---|
| (v) | பின்னர் சர்வதேச சந்தையில் மசகெண்ணெய் விலையில் தளம்பல் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் பின்வருமாறு மிகை அறவீட்டு பெறுமதியுடைய விசேட வர்த்தமானியினூடாக திருத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர்களால் 2020.12.31ஆந் திகதி வரையிலுமான தகவல்கள் மாத்திரமே கோரப்பட்டன. அது வரையிலும் இந்த திணைக்களத்திடமுள்ள அனைத்து தகவல்களும் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறான போதிலும், 2021 சனவரி 09ஆந் திகதியின் பின்னர் மிகை அறவீடு பெறுவனவுகள் |

| வர்த்தமானி இலக்கம் | திகதி | நடைமுறையிலுள்ள காலம் | பெற்றோல் 92 ஒக்டேன் | பெற்றோல் 95 ஒக்டேன் | ஒட்டோ டீசல் | சுப்பிரி டீசல் |
|---|---|---|---|---|---|---|
| --------- | ----------- | ----------- | ------- | ----- | ----- | ----------- |
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2172/6 | 2020. 04.22 | 2020. 04.23 ஆந் திகதி முதல் 02 மாதங்கள் | 26 | 49 | 24 | 40 |
| 2181/13 | 2020. 06.24 | அந்த திகதி முதல் 02 மாதங்கள் | 0 | 20 | 12 | 30 |
| 2189/57 | 2020. 08.23 | 2020. 08.24 ஆந் திகதி முதல் 03 மாதங்கள் | 0 | 20 | 12 | 30 |
| 2203/1 | 2020. 11.23 | 2020. 11.24 ஆந் திகதி முதல் 03 மாதங்கள் | 0 | 20 | 12 | 30 |
| 2213/7 | 2021. 02.01 | 2021. 02.02 ஆந் திகதி முதல் 2021. 02.23 வரை | 0 | 0 | 0 | 0 |

காணப்படவில்லை. அதுவரையிலுமான வங்கி மீதிகள் நாளதுவரையாக்கப்பட்டுள்ளதுடன், அந்த மீதி ரூபா 1,107,728,128.74 ஆகும்.

(vi) 2021 பெப்ரவரி 01ஆந் திகதி வெளியிடப்பட்ட 2213/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினூடாக 2020 நவம்பர் 23ஆந் திகதிய 2203/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்ட விதி 2021 பெப்ரவரி 02ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இரத்துச்செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த மிகை அறவீடு நடைமுறைப்படுத்தப்படல் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. (2021 பெப்ரவரி 23ஆந் திகதியின் பின்னர்)

பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | நடப்பாண்டின் ஆகஸ்ட், ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் முறையே ரூபா 12,000,000,442 , ரூபா 6,054,992,400 , மற்றும் ரூபா 2,744,260,400 ஆக ரூபா 20,799,253,242 கூட்டுத்தொகை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் வெளிவாரி பொறுப்புகள் கணக்கினூடாக உரிய திறைசேரி உண்டியல்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அமைச்சரவைத் தீர்மானத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த பொறுப்புகள் பொது திறைசேரியின் பொறுப்பாவதுடன், அதன் பின்னர் 100% உரிய பொறுப்பினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான விலை உறுதிப்படுத்தல் நிதியத்தினூடாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 26,673,196,758 ஆன போதிலும், அந்த பெறுமதிக்குரிய திறைசேரி உண்டியல்களின் முகப்பெறுமதி ரூபா 29,200,746,758 ஆகும். அதன் பிரகாரம், குறித்த திறைசேரி உண்டியல்களின் கழிவுப் பெறுமதியான ரூபா 2,527,550,000 ஆன அந்த வேறுபாடு, இந்த நடைமுறையின் காரணமாக திரண்ட நிதியத்திற்கு ஏற்படும் செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் அமைச்சரவைத் தீர்மானத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த பொறுப்புகள் பொது திறைசேரியின் பொறுப்பாவதுடன், அதன் பின்னர் 100% உரிய பொறுப்பினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 2021 சனவரி மாதம் 18ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், எரிபொரு விலை உறுதிப்படுத்தல் நிதியத்தினை வலுப்படுத்துவதற்காக ரூபா 48 பில்லியன் நிதி பொது திறைசேரியிலிருந்து விடுவிக்கும் நோக்கில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திறைசேரியின் செயலாளருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவும் கொவிட் தொற்றுநோய் நிலமை மற்றும் முன்னுரிமை செயற்பாடுகளின் அடிப்படையில் மற்றும் திறைசேரியிலுள்ள நிதியின் அடிப்படையில் இதுவரையிலும் உரிய 48 பில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்தினை முடிவுறுத்துவதற்கு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதால் இந்த விடுவிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பது தொடர்பில் எதிர்காலத்தில் கருத்திற்கொள்ளப்படும். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உரிய மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |